Int. J. Adv. Multidiscip. Res. (2022). 9(2): 184-190

International Journal of Advanced Multidisciplinary Research
ISSN: 2393-8870
www.ijarm.com
(A Peer Reviewed, Referred, Indexed and Open Access Journal)
DOI: 10.22192/ijamr Volume 9, Issue 2 -2022

ஆய்வுக்கட்டுரை

DOI: http://dx.doi.org/10.22192/ijamr.2022.09.02.015

# மு. இராகவையங்காரின் வாழ்வும் தமிழ்த்தொண்டும்

**திருமதி. சி. கீதா**
துணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி,
புதுச்சேரி.

## முன்னுரை:

தமிழுலகில் தோன்றிய அறிஞர் பெருமக்களுள் ஒருவராகத் திகழ்ந்தவர் மு. இராகவையங்கார் அவர்கள். *தமிழறிஞர், இதழாசிரியர், வரலாற்றாசிரியர், இலக்கியப் படைப்பாளர், பதிப்பாசிரியர், உரையாசிரியர்* எனப் பன்முகப் பரிமாணங்கள் கொண்டவராக விளங்கியவர். இத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழறிஞராகிய மு. இராகவையங்காரின் வாழ்க்கை பற்றியும் அவர் ஆற்றிய தொண்டுகள் பற்றியும் இக் கட்டுரை விளக்க முயல்கிறது.

## உட்தலைப்புகள்

- மு. இராகவையங்காரின் பிறப்பும் இளமைப் பருவமும்
- மு. இராகவையங்காரின் தமிழ்த்தொண்டுகள்
  - செந்தமிழ் – இதழ்த் தலைமை
  - அகராதி தொகுப்புப் பணி
  - பேராசிரியப் பணியும் வரலாற்று ஆய்வுப் பணியும்
- அவர்தம் ஆய்வு நெறிமுறைகளும் சிறப்புகளும்
- நிறைவுரை

## மு. இராகவையங்காரின் பிறப்பும் இளமைப் பருவமும்

பேராசிரியர் மு. இராகவையங்கார் இராமநாதபுரம் மாவட்டத்தில் அரியக்குடியில் ஜூலை மாதம் 7-ஆம் நாள் 1878-இல் பிறந்தவர். இவரது தந்தையாகிய முத்துசுவாமி ஐயங்கார் சேது சமஸ்தானத்தில் பணி புரிந்தவர். சதாவதானியாகத் திகழ்ந்தவர். மு. இராகவையங்கார் அவர்களின் 16-ஆம் வயதில் தந்தையார் நோய்வாய்ப்பட்டு காலமாகி- விட்டதால், பாண்டித்துரைத்தேவர் இவரை வளர்த்துப் பராமரித்தார். தொடர்ந்து கல்வி பயில உதவிச் செய்ததோடு மட்டுமல்லாமல், தாமே தமிழும் பயிற்றுவித்தார். மேலும், இலக்கண-இலக்கியங்கள்-நிகண்டுகள் ஆகியவற்றைக் கற்றுத் தேர்ந்தார். அது மட்டுமின்றி ஆங்கிலம் கற்ற அறிஞர்களுடன் பழகி ஆங்கிலப் புலமையும் பெற்றார். இவருடைய தந்தைக்குப் பிறகு சேது சமஸ்தானத்தில் அவைப்புலவராக விளங்கினார்.

## மு. இராகவையங்காரின் தமிழ்த்தொண்டுகள்

"செந்தமிழ்த் தலைமை"

பேராசிரியர் மு. இராகவையங்காரைப் பேணிப் பாதுகாத்த பாண்டித்துரைத்தேவர் அவர்கள், 1901-ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவியதோடு செந்தமிழ்க் கல்லூரியையும் தொடங்கினார். மேலும், அவர் 'செந்தமிழ்' என்ற இலக்கிய மாத இதழையும் தொடங்கினார். தேவர் தோற்றுவித்த இந்தக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார். பிறகு, தேவரின் வேண்டுகோளுக்கிணங்க அப் பணியிலிருந்து விலகி, 1904 முதல் 1912-ஆம் ஆண்டுவரை எட்டாண்டுகள் 'செந்தமிழ்' இலக்கிய மாத இதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்று நடத்தியுள்ளார். இவர் தலைமை ஏற்றப்பின் தமிழுலகம் பல நன்மைகளைப் பெற்றது என்று தமது நூலில் சிறப்பித்துக் கூறுவது குறிப்பிடத்தக்கது.

*தமிழ்க்கல்வியிலும், தமிழாராய்ச்சியிலும் பேரவாக் கொண்ட தமிழ் மக்கட்கு உறுதுணையாய் நின்றது செந்தமிழ்ப் பத்திரிகையேயாம். ஒவ்வொரு மாதத்துப் பத்திரிகையிலும் அதுவரை அறியாத அரிய விஷயங்களைக் குறித்துச் சிறந்த கட்டுரைகள் பல வெளிவந்து கொண்டேயிருந்தன. பத்திரிகை ஆசிரியர் எழுதியனவெல்லாம் தமிழ்மணமும் ஆராய்ச்சி நலமுஞ் செறிந்து விளங்கின. கற்பார்க்குப் பெருவிருந்தாயமைந்தன. ஒவ்வொரு மாதமும் செந்தமிழ் எப்போது வெளிவருமென்று பேராவலோடு தமிழன்பர்கள் எதிர்பார்த்த வண்ணமாயிருந்தார்கள். தமிழ்நாட்டுப் பெரும் பேராசிரியனா- யமைந்து, தமிழ் மக்கள் வீடுதோறுஞ் சென்று, தமிழ்க்கல்வி நலத்தை அவர்கள் நுகரும்படி செய்துவந்த பெருமை செந்தமிழ்ப் பத்திரிகைக்கே உரியதாக இருந்தது.*

*இப்பத்திரிகையின் உயிர் நிலையாயிருந்தவர்கள் ஸ்ரீ. மு. இராகவையங்காரவர்களே. பலர் சிறந்த தமிழறிஞர்களாக விளங்குவதற்கும், அறிவுநலமிக்க பலர் தமிழாராய்ச்சியை மேற்கொள்வதற்கும் இவர்களே காரணமாயிருந்தார்கள்* (தமிழ்ச்சுடர் மணிகள் பக். 392-393)

## 'செந்தமிழ்' இதழாசிரியராக இராகவையங்கார் பணியாற்றிய போது அவரால் எழுதப்பட்டும் பதிப்பிக்கப்பட்டும் வெளிவந்த நூல்கள்.

### வேளிர் வரலாறு (1905):

மதுரைத் தமிழ்ச் சங்க ஆண்டு விழாவில் இவர் ஆற்றிய உரை, நூலாக ஆக்கம் பெற்றது. இந் நூலில் வள்ளல் ராமசாமிச் செட்டியார் அவர்களுடைய சிறப்பான ஆங்கில முகவுரை இடம்பெற்றுள்ளது.

### திருக்குறள்–பரிமேலழகர் உரை (1912):

பிரதிகளை ஆராய்ந்து திருத்தங்களும் அடிக்குறிப்புகளும் அமைத்துப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். திருக்குறள் பதிப்பு வரலாற்றில் இந் நூல் தனிச்சிறப்பு வாய்ந்தது.

### தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி (1912):

தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்துகள் பற்றி எழுதப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய நூல் இது. இந்த ஆராய்ச்சிக் கட்டுரை நூல் மிகச்சிறப்பு வாய்ந்ததாகத் தமிழறிஞர்கள் பலரால் தேர்ந்தெடுக்கப்பட்டு இலங்கையில் உள்ள தமிழ்ப்புரவலர் ஸ்ரீகாந்தன் என்பவரால் பரிசளிக்கப்பட்டது.

### சேரன் செங்குட்டுவன் (1915):

சேரமன்னனைப் பற்றிய வரலாற்று ஆய்வு நூல் இது. இவை மட்டுமின்றி, *நரிவிருத்தம் (அரும்பதவுரை) சிதம்பரப்பாட்டியல் உரை, திருக்கலம்பகம் உரை, விக்கிரம சோழனுலா, சந்திராலோகம், கேசவப் பெருமாள் இரட்டை மணிமாலை* ஆகிய நூல்கள் செந்தமிழ் இதழில் பகுதிப் பகுதியாக வெளிவந்து தனி நூல்களாக ஆக்கம் பெற்றவை.

## அகராதி தொகுப்புப் பணி

1913 முதல் 1939 வரை, மதுரையில் தொடங்கி சென்னையில் நடந்து முடிவுற்ற தமிழ்ப் பேரகராதிக் குழுவில், தலைமைத் தமிழ்ப் பதிப்பாசிரியராகப் பணியாற்றினார். தமிழின் புதுப்பேரகராதியைத் தொடங்கிக் கிட்டத்தட்ட 26 ஆண்டுகள் உழைப்புக்குப் பின்னர் அதனை முழுமையடையச் செய்த பெருமை இவரையே சாரும்.

மு.ரா. அவர்கள் இந்த அகராதிப் பணியில் ஈடுபட்டுவந்த கால கட்டங்களில் மேலும் பல இலக்கியப் பணிகளையும் மேற்கொண்டார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் உ.வே.சா. அவர்கள் தலைமையில் இலக்கியம், சாசனம் பற்றிய 4 விரிவுரைகளை நிகழ்த்தினார்.

இந்த அகராதிப் பணி மேற்கொண்டிருந்தபோது ஆழ்வார்கள் *கால நிலை, சாசனத் தமிழ்க்கவி சரிதம், பெருந்தொகை, நூற்பொருட்குறிப்பு, ஆராய்ச்சித் தொகுதி, திருவைகுந்தன் பிள்ளைத்தமிழ், திருவிடந்தை எம்பெருமான்* ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டார். இந்தக் கால கட்டத்தில் தமிழில் *திவாகரம், பிங்கலம், உரிச்சொல், சூடாமணி* ஆகிய நான்கு நிகண்டுகளை உரிய திருத்தங்களுடன் அகராதிப்படுத்திய ஆதார நூல் ஒன்றை எழுதியதாகவும் அந் நூல் வெளிவரவில்லை என்றும் அறியமுடிகிறது.

## பேராசிரியப் பணியும் வரலாற்று ஆய்வுப் பணியும்

தமிழ் அகராதிப் பணியை நிறைவு செய்தபின் அவர் வானொலியிலும் பிற இடங்களிலும் உரையாற்றி வந்தார். 1944-ஆம் ஆண்டு லயோலா கல்லூரியில் பி.ஓ.எல் (B.O.L) வகுப்புகளைத் தொடங்கிப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அதன்பிறகு, 1945 முதல் திருவனந்தபுரம் பல்கலைக் கழத்தில் தமிழ்த்துறையின் முதல் பேராசிரியராக நியமனம் பெற்றார். இந்தக் கால கட்டங்களில் சேரநாட்டுத் தமிழ் வரலாறுகளையும் இலக்கியங்கள் பற்றிய பேருரைகளையும் நிகழ்த்தி, அவற்றை நூல்களாக வெளியிட்டுள்ளார்.

இவர் பேராசிரியர் பணியிலிருந்தபோது அவர் எழுதி வெளியிட்ட நூல்கள் *அரிச்சந்திர வெண்பா, சேரவேந்தர் செய்யுட்கோவை (முதல், இரண்டாம் தொகுதி), செந்தமிழ் வளர்த்த தேவர்கள், Some Aspects of Kerala and Tamil Literature* ஆகியவையாகும்.

இவரது பணி ஓய்வுக் காலத்திற்குப் பிறகும் *இலக்கியக் கட்டுரைகள் (1950), திரிசிராமலை அந்தாதி (1953), வினைத்திரிபு விளக்கம் (1958), கட்டுரை மணிகள் (1959), கம்பராமாயணம் (பால, சுந்தர காண்டம்) உரை* என்ற ஆராய்ச்சி நூல்களைத் தமது புதல்வர் மூலம் வெளியிட்டுள்ளார்.

## அவர்தம் ஆய்வு நெறிமுறைகளும் சிறப்புகளும்

மு. இராகவையங்காரது ஆய்வுநெறிமுறையானது வரலாற்று ஆய்வாகவும் இலக்கிய ஆய்வாகவும் இலக்கண ஆய்வாகவும் திறனாய்வாகவும் அமைந்துள்ளது. இவருடைய ஆய்வுநெறிமுறைகள் எவ்வாறு இருந்தன என்பதை அறிவதற்கு இவர் எழுதிய நூல்களும் கட்டுரைகளும் பெருந்துணை புரிகின்றன. நினைத்த போக்கில் எதையும் எடுத்துக்கூறாமல் உண்மையைக் கண்டுணர்ந்து உரைக்க வேண்டும் என்பதில் தீவிர கவனமுடையவர் என்பதை, *இதுகாறும்*

*கிடைத்துள்ள சாதனங்களையெல்லாந் திரட்டிக் கொண்டு ஒரு சார்புமின்றிச் சரித்திரக்காரனொருவன் செய்யும் ஆராய்ச்சி போன்றதேயின்றி, சம்பரதாயமுறையுள் நின்று கூறுவதன்று* (ஆழ்வார்கள் காலநிலை ப. 30) என்ற இவர்தம் கூற்றிலிருந்து அறியமுடிகிறது.

## இலக்கண ஆய்வு நெறி

பேராசிரியர் மு. இராகவையங்கார் அவர்கள் செய்துள்ள இலக்கண ஆராய்ச்சிகளை –

- **பண்டைய இலக்கண நூல்களின் பொருளைப் புதியமுறையில் விளக்குதல்**
- **மொழிவரலாறு முறையில் ஆய்தல்**
- **தமிழுக்குரிய புதிய இலக்கணம் இயற்றல்**

என்ற மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். முதல்வகை ஆய்வுக்குச் சான்றாகத் *தொல்காப்பிய பொருளதிகார ஆராய்ச்சி* என்ற நூலைச் சுட்டலாம். தமிழிலக்கியத்தின் முக்கிய போக்கை, அதன் உயிர்நாடியென விளங்கும் அகப்பொருள் கூறுகள் பற்றி இந் நூல் தரும் விளக்கம் தமிழ்ப் பயிலும் அனைவருக்கும் மிகுந்த பயனை அளிக்கும் வகையில் அமைந்துள்ளது எனலாம். இருப்பினும் *"இவருடைய பொருளதிகார ஆராய்ச்சி'யில் சில நூற்பாக்களை விரிவான விளக்கத்திற்கெடுத்துக்- கொண்டு அங்கெல்லாம் வடவரின் நான்மறைக் கருத்துகளும் பண்பாடும் தமிழரால் போற்றிப் பாதுகாக்கப்பட்டனவென்றும் இஃதே இவரின் பெருமையென்றும் கூறுகின்றனர்"* (இருபதாம் நூற்றாண்டு தமிழ்த் திறனாய்வாளர்கள் பக். 10)

என்று குறிக்கும் ப. மருதநாயகம் அவர்களின் கருத்திலிருந்து இவர்தம் தீவிர வடமொழிச் சார்பு அறியவருகிறது.

## காலம், வரலாறு பற்றிய ஆய்வு நெறி

இலக்கியச் சான்றாதாரங்களை வரலாற்று நோக்கோடு ஆராய்ந்து கால நிர்ணயம் செய்யும் வழிமுறைகளைக் கையாண்டு அவற்றின் மூலம் பல அரிய வரலாற்று உண்மைகளைத் தமிழில் வெளிப்படுத்திய பெருமை இவரையே சாரும்.

ஒருவர் வாழ்க்கைக் காலத்திற்குரிய மேல்வரம்பு, கீழ்வரம்பு என்ற இரு வரம்புகளையும், முன்பே தெளியப்பெற்றுள்ள உண்மைகளின் அடிப்படையில் தீர்மானித்துப் பின்னர் இவ்விரு வரம்புகளுக்கும் இடையே நூலின் போக்காலும் மேற்கோள்களாலும் இலக்கிய, வரலாற்றுச் சான்றுகளாலும் உறுதிபெறக்கூடிய காலப்பகுதியைச் சுட்டிக் காட்டுவது இவர் மேற்கொள்ளும் நெறி என்று என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

ஆய்வு என்பது ஏற்கெனவே அறியப்பட்ட உண்மைகளின் மேற்செலுத்தும் புதுநோக்கு என்றும் முற்றிலும் புதிய உண்மைகளை நிறுவுகின்ற ஆற்றல் என்றும் கூறலாம். புதிய உண்மைகளைச் சமுதாயம் ஏற்றுத் தனது அறிவைப் பெருக்கிக் கொள்ளும் முறையில் நிறுவன வேண்டுமென்றால், பரந்துபட்ட நூலறிவும், அந் நூலறிவை எப்போதும் தம் சிந்தனையில் இருத்தும் நினைவாற்றல், நுட்பமான நோக்கும் தெளிவாக எடுத்துரைக்கும் உரைத்திறனும், காரண காரியத்தோடு இணைத்து வெளிப்படுத்தும் விவாதப்போக்கும் பொருந்தி அமையும் அறிவாற்றல் ஆகியவை ஆய்வாளருக்குத் தேவைப்படும் தகுதிகளாக மு. இராகவையங்காரின் ஆராய்ச்சிப் படைப்புகள்வழி அறியமுடிகிறது.

மேலும் புதியநோக்கு, புதிய கருத்துகள், புதிய உண்மை இவற்றைக் கண்டறிவதில் மிகுந்த ஆர்வம் கொண்டவராக அவர் விளங்கியுள்ளமையை அவர்தம் ஆய்வுகள் மூலம் தெளிவாகக் காட்டுகின்றன.

## நிறைவுரை

பேராசிரியர் மு. இராகவையங்கார் முதன் முதலில் ‘செந்தமிழ்’ இதழ் மூலம் ஆய்வுப் பணியைத் தொடங்கி ஏறத்தாழ 58 ஆண்டுகள் வரை எழுத்துப் பணியைத் தம் உயிர்மூச்சாகக் கொண்டிருந்தவர் என்பதை அவர்தம் வரலாற்றால் அறியமுடிறது. அவர் தமக்கென்று சிறந்த ஆய்வுநெறிமுறையைக் கொண்டிருந்ததை அவர் படைத்த படைப்புகள் சான்று பகர்கின்றன. தன்னம்பிக்கை, விடாமுயற்சி, காலங்கருதாது உழைத்தல், தீராத ஆர்வம் போன்றவற்றைச் சிறப்புத் தகுதிகளாக இவரிடம் காணமுடிகின்றன. இவர் ஆற்றிய தமிழ்த் தொண்டைப் பாராட்டி அன்றைய அரசு ‘இராவ்சாகிப்’ என்னும் பட்டத்தினையும், சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கம் கேடயமும் வழங்கிச் சிறப்பித்துள்ளது.

## துணை நின்ற நூல்கள்


1. *மு. இராகவையங்கார் ஆராய்ச்சித் தொகுதி.* தமிழ்ப் பல்கலைக்கழகம். தஞ்சாவூர். 1984.
2. மருதநாயகம், ப. & சிலம்பு செல்வராசு நா. (ப.ஆ.) (2005). *இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்த் திறனாய்வாளர்கள்.* சென்னை: காவ்யா வெளியீடு.
3. வையாபுரிப்பிள்ளை, சு. (1968). *தமிழ்ச்சுடர்மணிகள்.* சென்னை: பாரி நிலையம்.
4. *செந்தமிழ் இலக்கியத் திங்கள்* (இதழ் 6 & 22 & 40).


| இந்தக் கட்டுரையை இணையத்தில் அணுகவும் | |
|---|---|
| | இணையதளம்: www.ijarm.com |
| | பொருள்: தமிழ் |
| விரைவுப் பதிலளிப்புக் குறியீடு | |
| DOI:10.22192/ijamr.2022.09.02.015 | |


இக்கட்டுரையை எவ்வாறு மேற்கோள் காட்டுவது :

சி. கீதா. (2022). மு. இராகவையங்காரின் வாழ்வும் தமிழ்த்தொண்டும். Int. J. Adv. Multidiscip. Res. 9(2): 184-190.

DOI: http://dx.doi.org/10.22192/ijamr.2022.09.02.015